TAMILTH Vellore 1 Regional_03 M RAJEN JEBA SINGH 220522 50610

சின்னச் சின்னதாய்

கலவை அருகே மணல் கடத்தியதாக இளைஞர்கள் உட்பட 3 பேர் கைது

ராணிப்பேட்டை

கலவை அருகே மணல் கடத்தியதாக 3 பேரை காவல் துறையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் கலவை அடுத்த வாழைப்பந்தல் காவல் எல்லைக்குட்பட்ட கமலண்டல நாகநதியில் தொடர்ந்து மணல் திருட்டு நடைபெறுவதாக காவல் துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, காவல் துறையினர் நேற்று முன்தினம் நள்ளிரவில் ரோந்துப்பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, மேலப்பந்தை கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் (40), முருகன் (60), அருண் (33) ஆகியோர் மாட்டு வண்டிகளில் மணல் கடத்தலில் ஈடுபட்டது தெரியவந்தது. இதையடுத்து, காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து 3 பேரையும் கைது செய்தனர். மணல் திருட்டுக்கு பயன்படுத்திய மாட்டு வண்டிகளையும் பறிமுதல் செய்தனர். பின்னர், அவர்களை ஆற்காடு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.



திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் 10 ஏக்கர் பரப்பளவில் ரூ.15 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் மாவட்ட விளையாட்டு மைதான கட்டுமான பணியை ஆட்சியர் நல்லசிவன் நேற்று ஆய்வு செய்து பணியை விரைவாக முடிக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். அருகில், எம்எல்ஏ திருப்பதி, மாவட்ட விளையாட்டு நல அலுவலர் ஜெயகுமாரி, வட்டாட்சியர் திருமலை உள்ளிட்டோர்.

ஆம்பூர் அருகே விவசாயி மயங்கி விழுந்து உயிரிழப்பு

ஆம்பூர்

ஆம்பூர் அருகே கால்நடைகளை மேய்ச்சலுக்கு ஓட்டி சென்ற விவசாயி திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த மிட்டாளம் ஊராட்சிக்கு உட்பட்ட பைரப்பல்லி கிராமத்தைச் சேர்ந்தவர் விவசாயி சேகர் (43). இவர், நேற்று தனக்கு சொந்தமான விவசாய நிலத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு ஓட்டி சென்றார். அப்போது நிலத்தில் அவர் திடீரென மயங்கி விழுந்தார். அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு, உமராபாத் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே சேகர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து தகவலறிந்த உமராபாத் காவல் துறையினர் சம்பவ இடத்துக்கு சென்று சேகர் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுதொடர்பாக காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.





வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று தர்ணாவில் ஈடுபட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர். (அடுத்த படம்) ராணிப்பேட்டை ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர் நேற்று தர்ணாவில் ஈடுபட்டனர்.

வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களில்

அரசு ஊழியர் சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம்

வேலூர்/ராணிப்பேட்டை/ திருப்பத்தூர்

பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் நேற்று போராட்டம் நடந்தது. இதற்கு அரசு ஊழியர் சங்க மாநில துணைத்தலைவர் தினேஷ் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் தீனதயாளன் முன்னிலை வகித்தார்.

இதில், பங்கேற்றவர்கள் டேப்ஸ் திட்டத்துக்கான விதிமுறைகளை உடனே வெளியிட்டு, பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும். சத்துணவு ஊழியர்களை கொண்டே காலை உணவு திட்டத்தை செயல்படுத்த வேண்டும். சாலை பணியாளர்களின் 41 மாத பணி நிலுவை காலத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டும். மருத்துவ துறையில் டாக்டர்கள், செவிலியர்கள் உட்பட அனைத்து நியமனங்களையும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கும் முடிவை கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர். அரசு ஊழியர்களின் போராட்டத்தால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பல்வேறு துறைகளின் அலுவலகங்கள் வெறிச்சோடி காணப்பட்டன.



திருப்பத்தூர் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கத்தினர் நேற்று தர்ணாவில் ஈடுபட்டனர்.

ராணிப்பேட்டை

ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர் சார்பில் நடைபெற்ற போராட்டத்துக்கு மாவட்டத்தலைவர் எழில் இளம்வழுதி தலைமை தாங்கினார்.

செயலாளர் பர்சிலா வான சாஸ்திரி, மாநில செயலாளர் விஜயகுமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மகளிர் துணை குழு அமைப்பாளர் மகேஸ்வரி வரவேற்றார்.

போராட்டத்தில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர். இதில், சங்கத்தின் முக்கிய நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

திருப்பத்தூர்

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் நடைபெற்ற தர்ணாவுக்கு மாவட்டத்தலைவர் அருள்மொழி வர்மன் தலைமை தாங்கினார். மாவட்டப்பொருளாளர் ராஜ்குமார் முன்னிலை வகித்தார். மாவட்டச்செயலாளர் பாண்டியன் போராட்டத்தை தொடங்கி வைத்தார்.

இதில், தமிழ்நாடு கல்வி துறை நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் முன்னாள் மாநிலத்தலைவர் சேகர், தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் சங்கத்தின் மாவட்டத்தலைவர் பிரேம்குமார், தமிழ்நாடு அரசு வருவாய் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் திருமால் உட்பட பலர் பங்கேற்றனர். முடிவில், மாவட்ட இணை செயலாளர் விஜயகுமார் நன்றி கூறினார்.

சாத்தனூர் அணைக்கான நீர்வரத்து 1,377 கன அடி

திருவண்ணாமலை

வடகிழக்கு பருவமழை தாக்கத்தால் சாத்தனூர் அணைக்கான நீர்வரத்து 1,377 கன அடியாக உள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையின் தாக்கத்தால் அங்குள்ள நீர் நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. அதேபோல், மாவட்டத்தில் முக்கிய நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

தென்பெண்ணை ஆற்றில் இருந்து கிருஷ்ணகிரி அணைக்கான நீர்வரத்து தொடர்ந்து இருந்து வருகிறது. இதன் காரணமாக, கிருஷ்ணகிரி அணையில் இருந்து தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் சாத்தனூர் அணைக்கான நீர்வரத்து நேற்று 1,377 கன அடியாக இருந்தது. 119 அடி உயரம் கொண்ட சாத்தனூர் அணையின் முழு கொள்ளளவு 7,321 மில்லியன் கன அடி. அணையில் தற்போது 98.65 அடி உயரத்துடன் 3,560 மில்லியன் கன அடியாகவும் உள்ளது.

குப்பநத்தம் அணை 59.04 அடி உயரத்துடன் 700 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்டது. அணையில் தற்போது 45.29 அடி உயரத்துடன் 390.32 மில்லியன் கன அடியாக உள்ளது. அணைக்கான நீர்வரத்து 99 கன அடியாகவும் உள்ளது. மிருகண்டாநதி அணை 22.97 அடி உயரத்துடன் 87,232 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்டது.

தற்போது, 12.46 அடி உயரத்துடன் 36.563 மில்லியன் கன அடியாகவும் அணைக்கான நீர்வரத்து 7 கன அடியாகவும் உள்ளது.

அதேபோல், செண்பகத்தோப்பு அணை 62.32 அடி உயரத்துடன் 287.20 மில்லியன் கன அடி கொண்டது. அணையில் தற்போது 51.76 அடி உயரத்துடன் 186.644 மில்லியன் கன அடியாகவும் அணைக்கான நீர்வரத்து 54 கன அடியாகவும் உள்ளது.

நெமிலி அடுத்த திருமால்பூரில்

புதிய சாலை அமைக்க பொதுமக்கள் கோரிக்கை

அரக்கோணம்

திருமால்பூரில் பல ஆண்டுகளாக சாலை வசதி கோரி மனு அளித்தும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் குற்றச்சாட்டு வைத்துள்ளனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட அடுத்த திருமால்பூர் பகுதி உள்ளது. இப் பகுதியில் 100-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

இப்பகுதியில் உள்ள சாலை முறையான பராமரிப்பின்றி சேறும் சகதியுமாக காணப்படுகிறது.

மக்கள் வேதனை

இதனால், பொதுமக்களும் பள்ளி மாணவ, மாணவிகளும் அன்றாடம் சென்று வருவதற்கு சிரமப்படுகின்றனர். சேறும் சகதியுமான பாதையில் வழுக்கி விழுந்து காயங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக, மழைக்காலங்களில் சாலையின் நிலை மேலும் மோசமடைவதால், அவ்வழியாக செல்வதே சவாலாக இருப்பதாக அப் பகுதி மக்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

25 ஆண்டுகளாக...

கடந்த 25 ஆண்டுகளாக தொடர்ந்து கோரிக்கை விடுத்தும் தங்களது பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவில்லை. எனவே, எங்கள் பகுதி மக்களின் நலனை கருத்தில் கொண்டு மாவட்ட நிர்வாகம் உடனடியாக தலையிட்டு, திருமால்பூர் பகுதியில் முறையான சாலை வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.



நெமிலி அடுத்த திருமால்பூரில் சேறும் சகதியுமாக உள்ள சாலை.

பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து தட சாலைகள் துறை
பே.த.சா.து.ந.க.எண்.பி4/3574/2026
மின்னணு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கண்காணிப்பு பொறியாளர் / பே.த.சா.து. அவர்களால் கீழ்காணும் விவரங்களின்படி இரு உறை முறையில் திறந்தவெளி மின்னணு ஒப்பங்கள் கோரப்படுகின்றன.
முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு இயக்கம் (CMIUDM) ன் கீழ், மண்டலம்-1 முதல் 15 வரையில் உள்ள மொத்தம் 538 எண்ணிக்கையிலான உட்புற தார் சாலைகள் அமைக்கும் பணி (21 சிப்பங்கள்)
பணியின் உத்தேச தொகை : **குறைந்தபட்சம் ரூ.203.81 இலட்சம், அதிகபட்சம் ரூ.357.72 இலட்சம், முன்வைப்புத் தொகை : பணித்தொகையில் 1%**
ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **27.11.2026** அன்று மாலை **3.00 மணி** வரை
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **27.11.2026** அன்று மாலை **3.30 மணி**
மேலும் விவரங்களுக்கு www.tntenders.gov.in & www.chennaicorporation.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்

செ.ம.தொ.இ/3288/ ஒப்பந்தப்புள்ளி /2026 — **கண்காணிப்பு பொறியாளர் (பே.த.சா.து)**

தமிழ்நாடு அரசு
மதுரை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒ.அ.எண். 03 / 2026-27 / தவஅ / நாள்: 23.10.2026

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, மதுரை வட்டம் அவர்களால் **"இராமநாதபுரம் - நயினார்கோவில் - அண்டக்குடி - இளையான்குடி - சிவகங்கை - மேலூர் சாலை (மா.நெ.34)-ல் கி.மீ.100/000 முதல் 103/000 வரை உள்ள சாலையை இருவழிச்சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்துதல், வலுப்படுத்துதல் மற்றும் குறுக்குக் வடிகால் பணிகள் உட்பட உள்ள சாலைக்கு மின்கம்பங்கள் இடமாற்றம் செய்யும் துணைப்பணி"** மதுரை (நெ) க(ம)ப கோட்டம்-1 சார்ந்த பணிக்கு இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளி **16.11.2026, 11.00 மணி** வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **30.10.2026, 18.00 மணி** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ / 3253 / ஒப்பந்தப்புள்ளி / 2026 — **கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, மதுரை வட்டம்.**

தமிழ்நாடு அரசு
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
திருநெல்வேலி மாநகராட்சி
தொலைபேசி எண்: 0462 – 2329328

திடக்கழிவு சேகரிப்பு மற்றும் போக்குவரத்துக்கான சேவை செயல்பாடுகள் மூலமாக திடக்கழிவுகளை சேகரித்து, திடக்கழிவு செயலாக்க மையங்களுக்கு கொண்டு செல்வதற்கும் /குப்பை கொட்டும் மையங்களுக்குக் கொண்டு செல்வதற்கும், நுண் உரமாக்கல் மையங்களை (MCCs) இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும் சேவை வழங்குநரைத் தேர்ந்தெடுத்தல் பணிக்கு ஒப்பந்தப் புள்ளி அழைப்பு (ந.க.எண். 17/2026–27, நாள்: 28.10.2026)

1. திருநெல்வேலி மாநகராட்சில் உள்ள திடக்கழிவு சேகரிப்பு மற்றும் போக்குவரத்துக்கான சேவை செயல்பாடுகள் மூலமாக திடக்கழிவுகளை சேகரித்து, திடக்கழிவு செயலாக்க மையங்களுக்கு கொண்டு செல்வதற்கும் /குப்பை கொட்டும் மையங்களுக்குக் கொண்டு செல்வதற்கும், நுண் உரமாக்கல் மையங்களை **(MCCs)** இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும் சேவை வழங்குநரைத் தேர்ந்தெடுத்தல் பணிக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.
2. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விபரங்களை **www.tntenders.gov.in, Corporation Website: www.tirunelvelicorporation.com** இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை **www.tntenders.gov.in** இணைய தள முகவரியில் **30.10.2026** முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்ததாரர்கள் முன் கலந்தாய்வு கூட்டம் **13.11.2026** அன்று **11.30 AM** மணியளவில் திருநெல்வேலி மாநகராட்சியில் நடைபெறும்.
5. ஒப்பந்தப் புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் **30.11.2026 அன்று 03.00 PM** வரையில்.
6. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **30.11.2026** அன்று **03.30 PM** மணி.
7. ஒவ்வொரு பணிக்கான மதிப்பீடு, வைப்பு தொகை **(Bid Security) - (RTGS/e-BG)**, ஒப்பந்ததாரருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறியவும்.

செ.ம.தொ இ./3277/ஒப்பந்தப்புள்ளி/2026 — **ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி.**

பஞ்சாப் நேஷனல் பேங்க் ..... भरोसे का प्रतीक ...the name you can BANK upon!
(A GOVERNMENT OF INDIA UNDERTAKING)

சொத்து மீட்பு மேலாண்மை கிளை தெற்கு டெல்லி,
4வது தளம், 7, பிகாஜி காமா பிளேஸ், புது டெல்லி-110066 Email : cs4168@pnb.bank.in

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டம் 2002 மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) சட்டம் 2002-ன் விதி 8(6)-ன்கீழ் அசையா சொத்துக்கள் மின்-ஏலம் விற்பனை.
இதன்மூலம் பொது மக்களுக்கு பொதுவாகவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்), மற்றும் ஜாமீன்தாரர்(கள்)-க்கு குறிப்பாகவும், கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளவை வங்கி/கடன் அளித்தவரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆக்கபூர்வ/பிசிக்கல்/சிம்பொலிக் எடுத்துள்ளார், முறையே கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) இடமிருந்து நிலுவைத் தொகையை வசூலிக்க கீழ்குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி "எங்கு உள்ளதோ", "எப்படி உள்ளதோ" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். ரிசர்வ் தொகை மற்றும் முன்வைப்புத் தொகை சொத்துக்களின் எதிராக முறையே கீழ்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளன.

பிணையச் சொத்துகளை விற்பனை செய்வதற்கான அட்டவணை

வ. எ ண்.	கிளை பெயர் / கணக்கு பெயர் / கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள் கணக்கு பெயர் மற்றும் முகவரி	அடமான அசையா சொத்துக்கள் விவரம்/ உரிமையாளர் பெயர் (அடமான சொத்து(கள்))	A) SARFAESI சட்டம் 2002-ன் விதி 13(2)-ன்கீழ் கோரிக்கை அறிவிப்பு நாள் / B) கோரிக்கை அறிவிப்பின்படி தொகை / C) SARFAESI சட்டம் 2002-ன் விதி 13(4)-ன்கீழ் சுவாதீன நாள் / D) சிம்பொலிக்/பிசிக்கல்/ஆக்கபூர்வ சுவாதீனம் வகை	A) ரிசர்வ் தொகை / B) EMD / C) ஏலம் உயர்வு தொகை	மின்-ஏலம் நாள்/ நேரம்	கடன் அளித்தவரால் அறியப்படும் வில்லங்கம் விவரங்கள்	அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/ நோடல் அதிகாரி பெயர் மற்றும் தொடர்பு எண்
1	**PNB BO Okhla NSIC (060200), புதுடெல்லி** **M/s. GENUINE INTERNATIONAL CC A/c எண். 3078008700001741 & CC A/c 4370008700001143** **M/s. Genuine International வழியாக K கணேஷ்** **முகவரிகள் :** • A-292. 2வது தளம், Okhla தொழிற்சாலை ஏரியா, பேஸ் 1 காவல் நிலையம் அருகில், டெல்லி-110020, • 416/2, கிராமம் மற்றும் PO ஜிடோமி, M G சாலை, டெல்லி-110030, • 165, காளி எண்.2, கபாஷ்ரா, புது டெல்லி-110037, • 365, Ice தொழிற்சாலை அருகில், கபாஷ்ரா, புது டெல்லி-110037, • காஷ்ரா எண்.156, சந்தன்ஹோலா, புது டெல்லி-110074, • D-88/3, Okhla தொழிற்சாலை ஏரியா, பேஸ் 1, டெல்லி-110020, • C-91, DDA ஷெட், Okhla தொழிற்சாலை ஏரியா, பேஸ் 1, டெல்லி - 110020, • மனை எண். 42, சிட்கோ தொழிற்சாலை எஸ்டேட், சிப்காட், ராணிபேட், வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டம் - 632403, சென்னை, • **திரு. K கணேஷ் த/பெ. B கண்ணன்,** மனை எண். 104/FF KH No.788 Gali No.6D K பிளாக், மாலிக்பூர் கோஹி அலைஸ் ரங்பூரி தெற்கு மேற்கு டெல்லி - 110037. • திரு. K கணேஷ் த/பெ. B கண்ணன், கதவு எண். 429/1, பேஸ் 1 பாரதி நகர், வள்ளார் நகர், சத்துவாசாரி, வேலூர்-9, சென்னை. **திரு. N அசீஸ் ரஹ்மான் (ஜாமீன்தாரர்),** முகவரிகள் • கதவு எண். H4, பழைய ஹவுசிங் போர்ட், சிப்காட், ராணிபேட், வேலூர் மாவட்டம், சென்னை-632403. • வீட்டு எண்.4, TNHB குவார்ட்டர்ஸ், சிப்காட், ராணிபேட்-632403. • திருத்தணி சாலை விரிவு வடக்கு கிழக்கு முடிவு (ச.எண். 669/1a, 699/2a, ஆனந்தலை கிராமம்) மேல்புதுப்பேட், வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டம்-632513 • கதவு எண். 114, பழைய ஹவுசிங் போர்ட், சிப்காட், ராணிபேட், வேலூர் மாவட்டம், சென்னை-632403 • S5/525 அமீன் அப்பார்ட்மெண்ட் IOB நகர், சிப்காட், ராணிபேட் தொழிற்சாலை ஏரியா, வேலூர், தமிழ்நாடு - 632403.	**அடமான சொத்தானது கதவு எண்./மனை எண்.42, சிட்கோ தொழிற்பேட்டை, சிப்காட், லேஅவுட் எஸ்.எப்.எண். 62, 63, 68, 69 மற்றும் 70, காரை வருவாய் கிராமம் மற்றும் எஸ்.எப்.எண். 225, 226, 352 மற்றும் 353, நரசிங்கபுரம் வருவாய் கிராமம், வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டத்திற்குட்பட்டது. அளவுகள் 7000 சதுர அடி. M/s. Genuine International மூலம் திரு. K கணேஷ் பெயரில் உள்ளது.** சொத்து ID: PUNB4LA26644976 Latitude: 12.57431 Longitude: 79.118117	**A) 08.04.2019** **B) ரூ.235.53 இலட்சம் + மேலும் வட்டி மற்றும் செலவுகள்** **C) 20.12.2019** **D) சிம்பொலிக்**	**A) ரூ.86.00 இலட்சம்** **B) ரூ.8.60 இலட்சம்** **EMD வைப்பு கடைசி நாள்: 16.11.2026** **C) ரூ.1,00,000**	**17.11.2026** காலை 11.00 மணிமுதல் மாலை 04.00 மணி வரை	**SA நிலுவையில் உள்ளது, ஆனால் IP விற்பனைக்கு தடை ஏதுமில்லை.**	**திரு. O.P. பலோட்டியா** Ph.: 9453035426

மின்-ஏலம் விற்பனை பற்றிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் : பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதி 2002-ல் விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி விற்பனை நடைபெறும் மற்றும் பின்வரும் நிபந்தனைகள். **(1)** ஏல விற்பனையானது "ஆன்லைன் மூலம் மின்-ஏலம்" **https://www.baanknet.com** வழியாக நடைபெறும். **(2)** இணையதளம் **(https://baanknet.com)** வழியாக மின்-ஏலமானது மின்-ஏலம் சேவை வழங்குநர் **M/s. PSB Alliance Pvt. Ltd. அதன் பதிவு அலுவலகம் யூனிட் 1, 3வது தளம், VIOS கமர்ஷியல் டவர், வடலா டிரக் டெர்மினர் அருகில், வடலா கிழக்கு மும்பை-400037 (உதவி எண். +91 8291220220)** மூலம் நடத்தப்படும். விருப்பமுள்ள ஏலதாரர்கள்/வாங்குபவர்கள் மின்-ஏலத்தில் பங்குபெற மின்-ஏலம் சேவை வழங்குநர் இணையதளம் **https://www.baanknet.com** பார்க்கவும். சேவை வழங்குநர் ஆன்லைன் செயல்விளக்கம்/பயிற்சி மின்-ஏலம் போர்ட்டல் வழியாக அளிப்பார்கள். **(3)** விற்பனை அறிவிப்பு தொகுப்பின் பொது நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் பின்வரும் இணையதளத்தில் கிடைக்கும் (1) **https://baanknet.com (2) www.pnbindia.in (4)** வெற்றிகரமான ஏலதாரர் வங்கிக்கு செலுத்தும் தொகை விற்பனை வருவாய் வரி சட்டம் 1961 மற்றும் பிரிவு 194-1A-ன்கீழ் TDS-க்கு பரிசீலனை உட்பட்டது மற்றும் மீதமுள்ள 75 சதவீதம் ஏலத்தொகை/ BIT தொகையின் முழு வைப்புத் தொகையை டெபாசிட் செய்யும் நேரத்தில் மட்டுமே வெற்றிகரமான ஏலதாரர் TDS செலுத்த வேண்டும். **(5)** சொத்தானது **"எங்கு உள்ளதோ" மற்றும் "எப்படி உள்ளதோ" மற்றும் "எந்த நிலையில உள்ளதோ"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். **(6)** மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த அறிவின்படி தகவலுக்கு கூறப்பட்டுள்ளன, ஆனால் எந்தவிதமான பிழை, பிழைஅறிக்கை அல்லது தவிர்த்தல் குறித்தவைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பொறுப்பேற்கமாட்டார். **(7)** SARFAESI சட்டம், பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 13(8) மற்றும் விதி 8(6)-ன்கீழ் மேற்குறிப்பிட்ட அனைவருக்கும் வழங்கப்படும் அறிவிப்பாகும். (8) விவரங்கள் விற்பனை நிபந்தனைகளுக்கு தயவுசெய்து **https://baanknet.com & www.pnbindia.in** பார்வையிடவும்.

நாள் : 28.10.2026, இடம் : புது டெல்லி — **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஞ்சாப் நேஷனல் வங்கி**

CH-VE